Library

யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி
வதிரி, கரவெட்டி.

J/Vadamaradchy Central Ladies' College
VATHIRY, KARAVEDDY.

UNIVERSITY OF JAFFNA
Library
SRI LANKA

# முதலாம் ஆண்டு தரிசனம்

1992

பிரதம விருந்தினர்:
திரு. ச. செல்லத்துரை

பரிசில் வழங்கல்:
திருமதி. செல்வநாயகி செல்லத்துரை

1992-10-21

University of Jaffna
373
VAT
250323(AR; Main)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி

முதலாண்டு விழா சிறப்புற

எமது அன்பான வாழ்த்துக்கள்

கலைமகளின் உறைவிடமாய், கல்விக்கு முதலிடமாய்
கலைகளுக்குத் தனியிடமாய், கற்போர்க்கு நிறைகுடமாய்
பள்ளியில் முதலிடமாய், பாவையரின் சிறப்பிடமாய்
வடமத்தியில் பெருநிதியாய் வந்துதித்தாய் - நின்
பேரோங்கி, சீரோங்கி, புகழோங்கி
உயர்கல்விப் பீடமென மேலோங்கி
வாழ்க! வளர்க!! எம் வாழ்த்துக்கள்.

# ஜமுனா ரேட்ஸ்

பிரதான வீதி, நெல்லியடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2007
373
VAT
UNIVERSITY OF JAFFNA LIBRARY

உ
சிவமயம்

# யா / வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி

## கல்லூரிக் கீதம்

UNIVERSITY OF JAFFNA SRI LANKA Library
ARCHIVES

ராகம்:- பிருந்தாவன சாரங்கா
தாளம்:- சதுஸ்ர ஏகம்

வாழிய வாழிய வாழியவே
வையகம் எழில்பெற வாழியவே
வடம ராட்சிமலர் மத்தியமகளிர்
திருவளர் கல்லூரி வாழியவே

சரணம்

வளம்செறி துறைகளில் இறைநிகர் குரவரின்
உளம்நிறை ஒளியினை உணர்ந்திடுவோம்
செந்தமிழ்த் தாய்பதம் சிந்தனைச் செம்மலர்
சந்ததம் சிந்தியே சூடிடுவோம்
வாழிய

அன்புயர் கலைவளர் அறிவிய லாலயம்
அவனியில் மாண்புற இறைஞ்சிடுவோம்
சமரசஞான மெய் உணர்வினில் செழித்திட
சுதந்திர கானமே இசைத்திடுவோம்
வாழிய

சீலம்தரு மோனத்தினால் ஞாலத்தையே வெல்லுவோம்
காலமெலாம் வென்று நாங்கள் ஞானவுலாக் கூடுவோம்
தூய உருத் தரிசனத்தில் காவியங்கள் காணுவோம்
தாயவளின் பாதமலர் பணிந்து நாங்கள் பாடுவோம்.
வாழிய

250323
N.A 250323
University of Jaffna
250323
Library
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிச்செய்தி

யாழ்ப்பாண பல்கலைக் கழக துணைவேந்தர்
### பேராசிரியர் அ. துரைராசா அவர்களின்
### ஆசிச்செய்தி

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி உருவாக்கப்பட்டு ஒரு வருடமுடிவைக் கொண்டாடும் விழாவுக்கு எனது வாழ்த்துச் செய்தியை அனுப்பி வைப்பதில் மிக மகிழ்ச்சியடைகிறேன். நெல்லியடி, கரவெட்டிப் பகுதியில் வசிக்கும் மக்கள் பெண் பிள்ளைகளுக்கு தனியான ஒரு கல்லூரி அமைய வேண்டுமென்று பலகாலமாக இருந்த விருப்பத்தை இக்கல்லூரி நிறைவேற்றியுள்ளது. இக்கல்லூரி வளர்ந்து விளையாட்டுத் துறை, செய்முறைப் பாடங்கள் முதலியவற்றுக்கு வேண்டிய வசதிகளை விரைவில் அடைய வேண்டுமென்பது எனது விருப்பம்.

பொருளாதாரத்தைப் பெருக்குவதற்கு மனிதவள அபிவிருத்தி அவசியம். கல்வி வளர்ந்தால்தான் மனிதவளம் வளரும். ஆகவே தமிழ்ப்பிள்ளைகளின் கல்வியில் எமது கல்லூரிகள் கூடிய கவனம் எடுக்க வேண்டியது அவசியம், தற்போது இருக்கும் சூழ்நிலையில் தமிழ்ப் பிள்ளைகளின் கல்வி பாதிப்பு அடைந்திருக்கிறது. இந்தப் பாதிப்புகளின் மத்தியிலும் கல்வியை அழியவிடாது வளர்க்க அதிபர்களும் ஆசிரியர்களும் தங்களை அர்ப்பணிக்க வேண்டும்.

ஒரு கல்லூரியின் வளர்ச்சிக்கு தனியே அரசாங்கத்தில் மாத்திரம் தங்கியிராது பெற்றோர்களும் நலன்விரும்பிகளும் பங்களிப்புச் செய்வது அவசியம். பழைய மாணவர் சங்கம், பெற்றோர் சங்கம் முதலியன கல்லூரியின் வளர்ச்சியில் அக்கறை எடுத்து வழிகாட்டவேண்டும்.

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி மாணவிகள் பரீட்சைகளிலும் மற்றைய மாணவர் போட்டிகளிலும் திறமையைக் காட்டி வருகிறார்கள். இதற்கு பொறுப்பாக உள்ள அதிபரையும் ஆசிரியர்களையும் பாராட்ட விரும்புகிறேன். இக்கல்லூரி விரைவில் வளர்ந்து கரவெட்டி - நெல்லியடிக் கொத்தணிப் பகுதியில் ஒரு சிறந்த பெண்கள் கல்லூரியாக விளங்க இறைவனை வேண்டுகின்றேன்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

அ. துரைராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிச்செய்தி

UNIVERSITY OF JAFFNA Library SRI LANKA

### திரு. இ. சுந்தரலிங்கம் அவர்கள் வழங்கிய

( கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம் )

### ஆசிச்செய்தி

ARCHIVES

நெல்லியடி மக்களினதும், வடமராட்சி பெரும்பாகப் பிரிவுக் கல்வியாளர்களதும், நீண்டகாலக் கனவு 'வட மத்திய மகளிர் கல்லூரி' உதயமானதிலிருந்து நிறைவு பெறுகின்றது.

இப்போது ஓராண்டு பூர்த்திவிழாவையும் பெற்றோரும் - அதிபரும் - ஆசிரியர்களும் - மாணவர்களும் பூரிப்புடன் கொண்டாடும் வேளையில் ஆசிச் செய்தி அனுப்புவதில் மகிழ்ச்சியடைகிறேன். வடமராட்சி மக்கள் கல்வியிலும், பண்பாட்டிலும் முன்னோடிகள். இப்பிரதேசத்தில் ஐந்தாவது பெண்கள் கல்லூரியாகப் பரிணமித்த இக்கல்விக் கூடம் மாணவிகளின் எதிர்கால வாழ்வுக்கும் கல்வி மேம்பாட்டுக்கும் கலங்கரை விளக்கமாகத் திகழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

இ. சுந்தரலிங்கம்
(கல்விப் பணிப்பாளர்)

கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்,
14-10-92

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிச்செய்தி

# திரு. சி. த. மார்க்கண்டு அவர்கள்

இலங்கை நிர்வாகசேவை B. A. (Econ.)
இணைப்பு ஆலோசகர் - வ. கி. மா.
Co-Ordinating Consultant - NEP
(முன்னாள் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர்)

வழங்கிய

## ஆசிச்செய்தி

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி அதிபரும் கல்லூரி அபிவிருத்திச் சபையினரும் கல்லூரியின் ஓராண்டு நிறைவு தினத்தை ஒட்டி ஓர் ஆசிச் செய்தி அனுப்பும்படி கேட்டதற்கு இணங்க இந்த ஆசிச் செய்தியை அனுப்புவதில் பெரும் மனமகிழ்ச்சி அடைகிறேன்.

கட்டைவேலிப் பெரும் பிரதேசத்தில் ஒரு மத்திய இடத்தில் மாணவிகட்கு என ஒரு தனிக்கல்விக்கூடம் அமைய வேண்டிய தேவை இருந்து வந்தது. இது பெற்றோராலும் பெண்களின் கல்வியிலும் முன்னேற்றத்திலும் உள்ளீடான கரிசனை உடையவர்களாலும் உணரப்பட்டு வரலாயிற்று. இக்கல்லூரி அமைந்த இடத்தில் பரோபகாரியும், சிவநெறிச் செம்மலும் கொடைவள்ளலுமான வதிரி அமரர் உடையார் கனகசிங்கம் வடமராட்சி மத்திய தமிழ்க் கலவன் பாடசாலையை நிறுவினார். திரு. கனகசிங்கத்தின் மறு நாமம் செல்லையா ஆகும். இப்பெயரே நிலைத்து "செல்லையா பள்ளிக்கூடம்" என வழங்கலாயிற்று.

இப்பாடசாலைக்குத் தென் இந்தியாவில் இருந்துவந்த திரு. N. S. ராஜகோபாலன் அதிபராக நியமிக்கப்பட்டபோது, ஆங்கில போதனை காரணமாக பாடசாலையின் பெயர் மாற்றப்பட்டது, "வடமராட்சி மத்திய ஆங்கிலப் பாடசாலை' எனஅழைக்கப்பட்டது. திரு. கனகசிங்கத்தின் மகன் மகேந்திரன் மகளிர் கல்லூரி தோன்றப்பக்கபலமாக இருந்தார் என்பதனையும் குறிப்பிட விரும்புகின்றேன்.

1984ம் ஆண்டில் இருந்து எடுத்த நடவடிக்கைகளும் அதன்பின்பு தொடர்ந்து எடுத்த முயற்சிகளும் ஆக்கபூர்வமான முடிவைத் தந்தன. ஆவலும் இடைவிடா முயற்சியும், ஊக்கமும், மேல் அதிகாரிகளின் நீதி நியாயமான அணுகுமுறைகளும் சித்தியைத் தந்தன. இக்கல்லூரி அமைக்கப்பட்டதை அறிந்தவர்கள் அமோகமாக வரவேற்றார்கள்; ஆதரவு நல்குகின்றார்கள். இது கல்லூரியின் தோற்றத்தை நியாயப்படுத்துகின்றதல்லவோ?

இன்று உலகளாவிய ரீதியில் சமூக, பொருளாதார, கல்வி, விடுதலை, ஆன்மீகத்துறையிலே பெண்களின் பங்களிப்பும் தொண்டும் அதிகரிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால மாற்றத்துக்கு ஏற்ப கருத்துக்களிலும் மாற்றம் ஏற்படுகின்றது, இது வரலாறு. நல்ல நெறி, நல்ல பண்பு, நல்ல பழக்கவழக்கம், நல்ல ஒழுக்கம், ஊர்ப்பற்று, விடுதலைப்பற்று. சமூகத் தொண்டு, ஆகியவற்றை முதலில் பிள்ளைகள் தாய் - தந்தையரிடம், பின் தமது குருவான ஆசிரியரிடம், ஈற்றில் தாம் வாழும் பழகும் சூழலில் உள்ள அறிவுடைய சான்றோரிடம் கற்றுக் கொள்கின்றனர். இந்தவகையில் தாய் பெருமைக்குரிய இடத்தைப் பெறுகின்றாள்.

'' நூலைப் போல சேலை; தாயைப்போல பிள்ளை '' என்ற முதுமொழி இவ்வுண்மையைப் புலப்படுத்துமன்றோ? சமுதாய மேம்பாட்டுக்கு பெண்கள் எவ்வளவு கல்வி கற்கமுடியுமோ, எவ்வளவு கல்வியாலும் – கேள்வியாலும் அறிவைப் பெருக்க முடியுமோ அவ்வளவுக்கு அவர்கள் வாழும் சமுதாயம், அவர்களின் பிள்ளைகள் ஒளி மயமானதாக அமைவர். அறிவு பெருகப் பெருக அறியாமை என்கின்ற இருள் அகன்று அகன்று தூரச் செல்லும்.

இப்புதிய கல்லூரி கல்வி, விளையாட்டு, கவின்கலைகள் ஆகியவற்றில் நல்ல சாதனைகளைச் செய்யும் என்பதில் ஐயமில்லை. எந்தச் சவாலையும் ஏற்று, எதிர் நீச்சலடித்து வெற்றிவாகை சூடத் தேவைப்பட்ட வசதிகளைத் தேட இதன் எதிர் காலத்தில் அக்கறையுடைய அனைவரும் அரும்பாடுபட வேண்டும். நல்லோர் அறிவுடைய மக்களின் நல்இணக்கம் இதற்கு அத்தியாவசியமானது.

இக்கல்லூரி ஒரு முன்மாதிரியான மகளிர் கல்லூரியாக, பிரபல்யமான கல்லூரியாக வளரச்செய்தல் பெற்றோர். பழைய மாணவிகள், ஆசிரியர்கள், நலன் விரும்பிகள், கல்விமான்களின் தலையாய பொறுப்பாகும்.

இப்புதிய மகளிர் கல்லூரி. தேசிய மட்டத்தில் பிரசித்தி பெற்ற கல்லூரிகளின் நடைமுறைகளை அறிந்து, தனக்கென்று ஒரு மரபு முறையை ஏற்படுத்த வேண்டும். தனக்கான ஒரு பணியை தயார் செய்ய வேண்டும். கல்லூரி தனக்கானதொரு முத்திரையை பதியச் செய்ய வேண்டும். இக்கல்லூரி அமைவதற்கான தீர்மானத்தை முன் மொழிந்து அது உருவாகும் வரை பங்களிப்புச் செய்தவன் என்ற வகையில், அதுவும் அல்வாய் அபிவிருத்திச் சபையின் தலைவராக இருந்து அதன் ஊடாகச் சில காரியங்களைத் தளரவிடாது முன்னெடுத்துச் சென்றவகையில், உரிமையுடன் மட்டிலா இறும்பூதடைகின்றேன்.

இக்கல்லூரியை எல்லோருடைய நன்மதிப்பைப் பெற்ற அதிபர் திருமதி.ச. சுந்தரலிங்கமும் அவருடைய ஆசிரியர் குழாமும் நல்ல திசையிலே படிப்படியாக முன்னெடுத்துச் செல்வர் என்ற நம்பிக்கை உண்டு. இக்கல்லூரியின் அபிவிருத்திக்கு இக்கல்லூரிச் சுற்றாடலில் உள்ளவரும் கல்விக் குடும்பத்தில் உதித்தவரும் உலகத்தினரால் அங்கீகரிக்கப்பட்ட புகழ்பூத்த பொறியிலாளரும் தமிழ் அபிமானியும் யாழ்ப்பாண பல்கலைக்கழக உப வேந்தருமான பேராசிரியர் அ. துரைராசாவின் ஒத்துழைப்பு இருந்து வருவது ஒரு வரப்பிரசாதம் என்றால் அது மிகையாகாது.

இக்கல்லூரியின் எதிர்கால வளர்ச்சியில் ஆளுநர், பிரதம செயலர் திரு. சொ. கணேசநாதன், கலவி அமைச்சுச் செயலர் ஜனாப் காதர் மொகிதீன், வடபிராந்திய கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம், பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. ச. செல்லத்துரை ஆகியோர் காட்டிவரும் அக்கறை தரும் ஒத்துழைப்பு பெரிதும் பாராட்டற்குரியது

இக்கல்லூரி வளர்பிறை போல வளரவும், அறுகு போல் வேரூன்றி ஆல்போல் தழைக்கவும் பெண்மனை போல வாழவும் எல்லாம் வல்ல கல்விப் பேடாம் சகலகலா வல்லியான சரஸ்வதியின் அருள் கிடைக்க வேண்டுகிறேன்.

பொதுநிருவாக மாகாணசபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு
சுதந்திர சதுக்கம், கொழும்பு 7.
30—9—1992

சி. த. மார்க்கண்டு
( இணைப்பு ஆலோசகர் - வ. கி. மா. )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி

பிரதிக் கல்விப் பணிப்பாளர்

## திரு. ச. செல்லத்துரை அவர்கள் வழங்கிய

## ஆசிச்செய்தி

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி தனது முதலாம் ஆண்டு நிறைவு விழாவை கொண்டாடுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

வட மத்திய கல்லூரியாக அரும்பி பின் நெல்லியடி ம. ம. வியுடன் இணைந்து தற்போது இக் கல்லூரி தனியான மகளிர் கல்லூரியாக மலர்ந்துள்ளது. இப்பகுதிக்கு ஒரு பெண்கள் கல்லூரி வேண்டும் என்று பல காலமாக பலர் முயன்றபோதும், அவ் விருப்பம் 21 ஒக்ரோபர் 1991 இலேயே நிறைவேறியுள்ளது, இக்கல்லூரியின் தோற்றத்திற்கு முன்னின்று உழைத்த அனைவருக்கும் இப்பகுதிப் பெற்றோர்கள் நன்றி யுடையவர்களாக இருப்பார்களென நம்புகின்றேன்.

இக்கல்லூரி தொடர்ந்தும் சிறந்தசேவை செய்து ஒரு சிறந்த பெண்கள் கல்லூரியாக மிளிர இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

வடமராட்சிக் கல்விக் கோட்டம், பருத்தித்துறை. 92ஒக்ரோபர் 15.

ச. செல்லத்துரை
( பிரதிக் கல்விப் பணிப்பாளர் )
வடமராட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி

## திரு. செ. ஸ்ரீநிவாசன் அவர்கள்

B A. (SL) Dip-in (UK) SLAS
பிரதேச செயலர் / உதவி அரசாங்க அதிபர்
வடமராட்சி தெற்கு, மேற்கு
கரவெட்டி.

நாகரீக உலகம் என்று சொல்லப்படுகின்ற மேற்கு உலகம் கூட இந்த நவீன யுகத்தில்தான் பெண்ணுரிமை பற்றிப் பேசியிருக்கின்றபொழுது, தமிழன் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகட்கு முன்னரேயே பெண்களுக்கு முதலிடம் கொடுத்து, அவர்களைத் தெய்வீக நிலைக்கு உயர்த்தி மதித்துப் போற்றியதை நம் பழம்பெரும் வரலாறுகள் வாயிலாக அறியமுடிகின்றது. தமிழரின் பிரதான மதமான இந்து மதத்திலும் பெண்கட்கும் பெருமை அளிக்கப்பட்டுள்ளதை காணமுடிகிறது.

ஆனாலும், காலப்போக்கில் இந் நிலையில் மாற்றம் ஏற்பட்டது. இக்கீழான நிலையைக் கண்டுதான் புரட்சிக்கவிஞன் பாரதி வெகுண்டெழுந்து பெண்ணுரிமைக்காகப் போர்க்கொடி உயர்த்தினான்- இவ் அவலநிலை இன்றும் மாறவில்லை,

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் கல்வி பயிலும் மாணவிகள் பெரும் முயற்சியின் பின்னர்தான் பெண்கட்கென்று தனியொருபாடசாலையை அமைக்க முடிந்தது- என்பதை அறிவார்கள். இவ்வெற்றிக்காக உழைத்ததில் பாடசாலை அதிபர் திருமதி சரோஜினி சுந்தரலிங்கத்திற்கும் பெரும் பங்குண்டென்பதை பலரும் அறிவர்.

பெண்கட்கான தனிப் பாடசாலை அமைக்கப்பட்டு இன்றுடன் ஓர் ஆண்டு பூர்த்தியாவதையிட்டுப் பெருமகிழ்ச்சியடைகிறேன். இப் பாடசாலையிலிருந்து பேர்பெற்ற பெண்விஞ்ஞானிகள், பெண்வைத்திய நிபுணர்கள், பெண்உயரதிகாரிகள் வருங்காலத்தில் தோன்றவேண்டும் என்ற என் விருப்பத்தைத் தெரிவிப்பதோடு பற்பல துறைகளிலும் இப்பாடசாலை இப்பகுதியில் மேனிலையில் விளங்கவேண்டுமென்றும் என் ஆசிகளைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமைப்படுகிறேன்.

பிரதேச செயலகம்.
வடமராட்சி தெற்கு - மேற்கு,
கரவெட்டி. 21-10-92

செ. ஸ்ரீநிவாசன்
(பிரதேச செயலர், உதவி அரசாங்க அதிபர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி

நெல்லியடி கொத்தணி அதிபர்

## திரு. சி. சிற்றம்பலம் அவர்கள் வழங்கிய

## ஆசிச்செய்தி

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் ஒரு பகுதியாக நீண்டகாலம் விளங்கிய மகளிர் பிரிவு, இன்று தனிக்கல்லூரியாக உருவெடுத்த முதலாம் ஆண்டு நிறைவினைக் கொண்டாடுவதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

பள்ளிக்கூடம் சமூகத்தின் மாதிரிச் சிறு உருவம் என்பதற்கு இணங்க இக்கல்லூரி வடமராட்சிப் பகுதியின் கல்வி மேம்பாட்டிற்கு வழி வகுக்கும் என எதிர்பார்க்கிறேன்.

நாம் எந்த நாகரீகத்தை உருவாக்க விரும்புகின்றோமோ அதனைப் பொறுத்தே நமது பள்ளிக்கூட வகைகள் அமைந்திருத்தல் வேண்டும் என்று அமெரிக்காவிலுள்ள கொலம்பியா பல்கலைக்கழகப் பேராசிரியராய் இருந்த கில்பற்றிக் என்பவர் கூறிய கருத்து, இங்கு சிந்திக்கத்தக்கது. ஒரு நாட்டின் வருங்காலம் எப்போதும் அந்நாட்டின் பள்ளிகளின் வகுப்பறைகளில்தான் உருவாக்கப்படுகின்றது. வாழ்க்கை என்ற நாடகத்தின் வளர்ச்சி என்ற அங்கம் பள்ளி என்ற மேடையிற்தான் அரங்கேறுகின்றது.

'கற்க மறுப்பவன் வாழ மறுக்கிறான்', என்பதை நினைவுகூர்ந்து கல்லூரியின் எதிர்காலம் சிறப்படைய எமது நல்லாசிகள்.

நெல்லியடி ம. ம. வி.
கரவெட்டி. 14—10—92.

சி. சிற்றம்பலம்
( கொத்தணி அதிபர் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி

கல்லூரியின் வளர்ச்சிக்கு வித்திட்டு அரும்பணியாற்றியவரான
நெல்லியடி மத்திய் மகா வித்தியாலய மகளிர் பிரிவு
ஆரம்பத் தலைவர்
அவ்வித்தியாலய முன்னைநாள் உப அதிபர்

## திரு. ஆ. இராசரத்தினம் அவர்கள் வழங்கிய
## ஆசிச் செய்தி

*நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மகளிர் பிரிவின் ஆரம்பம் முதல் ஏழுவருடங்கள் அப்பிரிவின் பொறுப்பையேற்று என் குழந்தையாக அதனைக் கருதி அதன் வளர்ச்சியிலே மகிழ்ந்த யான், அது தனிக்கல்லூரியாகி இன்று ஓராண்டு நிறைவு பெறுவதையிட்டு அகம் மிக மகிழ்கிறேன்.*

*தனிக் கல்லூரியாகத் திகழ்ந்த கடந்த ஓராண்டு காலத்தில் கல்லூரி காட்டிய துரித வளர்ச்சி அதன் எதிர் காலம் ஒளிமயமாகத் திகழ விருப்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.*

*இக்கல்லூரி, பல்லாண்டு காலம் பலருக்கு அறிவொளியூட்டும் ஒளி விளக்காய்த் திகழ்ந்து, வடமராட்சியின் முடிமணியாய் விளங்க என்றும் என் ஆசிகளும் - பிரார்த்தனைகளும்.*

வதிரி, கரவெட்டி.
*21—10—92*

ஆ. இராசரத்தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் அறிக்கை

எமது அழைப்பையேற்று இங்கே பிரதம விருந்தினராக வருகை தந்திருக்கும் எமது பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. ச. செல்லத்துரை அவர்களே, திருமதி செல்லத்துரை அவர்களே, சிறப்பு விருந்தினர்களாக இங்கே வீற்றிருக்கும் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்—

திரு. ஏகாம்பரநாதன் அவர்களே,
திரு. செல்வரத்தினம் அவர்களே,
திரு. சிவராசா அவர்களே,
பிரதேச செயலர் திரு. ஸ்ரீநிவாசன் அவர்களே,
எமது கொத்தணி அதிபர் திரு. சிற்றம்பலம் அவர்களே,

பெரியோர்களே, நிறுவனத் தலைவர்களே, பாடசாலை அதிபர்களே, ஆசிரியர்களே, எமது அன்புக்குரிய கல்லூரி நலன்விரும்பிகளே, பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களே, பாடசாலை அபிவிருத்திச் சபை உறுப்பினர்களே, பெற்றோர்களே, பழைய மாணவிகளே, எங்கள் கல்லூரி ஆசிரியர்களே, எமது மாணவிகளே, ஏனைய அன்பர்களே, அனைவருக்கும் என் விநயமான காலை வணக்கங்கள்.

எங்கள் கல்லூரி விழாவுக்கு முதன்மை கொடுத்து வந்திருக்கும் உங்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கின்றேன்.

எம்மைச் சூழவுள்ள பிரதேச மாணவிகள் கல்வி கற்பதற்கு எமது பிரதேசத்தில் ஒரு பெண்கள் கல்லூரி இருக்கவேண்டியதன் அவசியம் பலராலும் உணரப்பட்டதால் 1976ல் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மகளிர் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது,

எதிர்காலத்தில் ஒரு தனி மகளிர் கல்லூரியாக்கும் நோக்குடனேயே ஆரம்பிக்கப்பட்ட இம் மகளிர் பிரிவு மிகத் துரிதமாக வளர்ந்து 21-10-91 அன்று அந்நோக்கத்தை நிறைவேற்றியது.

நாட்டு நிலை சீரற்றிருந்தபோதும் பாடசாலை நலன்விரும்பிகளின் உதவியுடன் உதவியுடன் 21-10-91 திங்கட்கிழமையன்று சுபவேளையிலே திரு. நமச்சிவாயக் குருக்கள் அவர்கள் சமயாசார ரீதியாக எமது கல்லூரியை அங்குரார்ப்பணம் செய்துவைத்தார். எமது கல்லூரி இன்று தன் சேவையிலே ஓராண்டைப் பூர்த்திசெய்து நிற்கிறது.

இந்த ஓராண்டு காலத்திலே எமது கல்லூரியின் நிலை, எமது கல்லூரியின் செயற்பாடுகள், கல்லூரி வளர்ச்சிக்கு அவசியமான தேவைகள் முதலியன பற்றிய கருத்துக்களை உங்களுடன் பகிர்ந்து கொள்வது இவ்விடத்தில் அவசியமெனக் கருதுகிறேன்.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மகளிர் பிரிவாக இயங்கியபோது நாம் ஆண்டு 6—11 வரை வகுப்புகளை நடாத்த அனுமதிக்கப்பட்டிருந்தோம், அதே வகுப்புக்களே இன்றும் உள்ளன,

இன்றைய மாணவர் தொகை — 557
வகுப்புப் பிரிவுகளின் எண்ணிக்கை — 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரி அங்குரார்ப்பணம் செய்யப்பட்டபோது என்னுடன் எமது ஆசிரியர் குழாத்திருந்தோர்:—

1. திருமதி சி. சிறீஸ்கந்தராசா (உபஅதிபர்)
2. திருமதி மே. அ. யுவக்கிம்
3. திருமதி ம. திருநாவுக்கரசு
4. திருமதி சி. ரங்கநாதன்
5. திருமதி மீ. சந்திரசேகரம்
6. திருமதி சி. சிவநேசன்
7. செல்வி த. சரோஜா
8. திரு. ந. குலேந்திரராஜா
9. திருமதி இ. குலவீரசிங்கம்
10. திருமதி ப. பாலசுப்பிரமணியம்
11. திருமதி சி. சிவசுப்பிரமணியம்
12. திருமதி வி. தேவச்சந்திரன்
13 செல்வி ம. நடராசா
14. திருமதி இ. சோமசுந்தரம்
15. திருமதி கௌ. துரைராசா
16. திருமதி கி. யோகராஜா
17. செல்வி சோ. சதாசிவம்
18. செல்வி செ. செல்வராணி
19. திரு. இ இராகவன்

இவர்களில் பட்டதாரிகள் அறுவர். விசேட பயிற்சிபெற்றோர் ஒன்பதின்மர். பொதுப் பயிற்சி பெற்றவர் ஒருவர், சங்கீத ஆசிரியர் ஒருவர். பயிலுநர் ஆசிரியர் ஒருவர். பயிற்சி பெறாதவர் ஒருவர்.

ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக வசதிகள் சேவைகள் கட்டணத்தில் அமர்த்தப்பட்டோர்:—

1. செல்வி பே. சிவகுரு (நடனம்)
2. செல்வி ஜெ. தம்பிப்பிள்ளை (ஆங்கிலம்)

மேற்கண்ட ஆசிரியர்களில் செல்வி த. சரோஜா இடமாற்றம் பெற்றும், திருமதி செ. சிவசுப்பிரமணியம் இளைப்பாறியும் சென்றுள்ளனர். இவர்களிடத்துக்கு முறையே திருமதி பு. ஜெகதீஸ்வரன், திரு. இ. வரதராஜா ஆகியோர் வந்துள்ளனர்.

வசதிகள் சேவைகள் கட்டணத்திற் சேவையாற்றிய இருவருக்கும் பயிலுநர் ஆசிரியர் நியமனம் கிடைத்துள்ளது. அவர்களில் செல்வி பே. சிவகுரு உடுப்பிட்டி மகளிர் கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

கடந்த மாதம் வெளிமாவட்டத்திலிருந்து இடமாற்றம் பெற்று திருமதி ஸ்ரீ நந்தினி தேவி என்னும் கலைப்பட்டதாரி வந்துள்ளார், இவரைவிட பகுதிநேர ஆங்கில ஆசிரியராக திரு. P. சின்னத்தம்பி அவர்கள் இம் மாத ஆரம்ப முதல் நியமிக்கப்பட்டுள்ளார். செல்வி ம. நந்தினி கல்வி வளர்ச்சிக் கழகத்தால் கடந்த ஜனவரி முதல் ஆசிரியராக நியமிக்கப்பட்டுள்ளார்.

எமது ஆசிரியர் குழாத்தில் விளையாட்டுப் பயிற்சி ஆசிரியர் ஒருவர் இல்லாமை மிகப் பெரிய குறையாகும். ஒழுங்காகப் பயிற்சியளித்து. விளையாட்டுத் துறையிலே எமது மாணவிகளின் உச்சத் திறனை எம்மாற் காணமுடியாதுள்ளது. எங்கள் குழந்தைகளின் திறமைகள் நசுக்கப்பட்டுவிடாமல், முடிந்தளவு அதனை வளர்த்துவிடவேண்டியது எம் அனைவரது கடமையுமாகிறது இங்கே சமுகந் தந்திருக்கும் எமது பிரதம விருந்தினரும் பிரதிக் கல்விப் பணிப்பாளருமான திரு. ச. செல்லத்துரை அவர்கள் இக் குறையை விரைவிலே நீக்கித்தரவேண்டுமென விநயமாகக் கேட்கிறேன். அவர் நினைத்தால் அதுமுடியாத ஒன்றல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கல்வித்துறை:**

கடந்தவருடம் க. பொ. த. (சா. த.) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர் தொகை 91. அவர்களிற் க. பொ. த. (உ. த.) வகுப்பிற் கற்கத் தகுதி பெற்றோர் 33 பேர். பாடசாலையில் மிகச் சிறந்த பெறுபேறாக செல்வி ந. சந்திரிக்கா எல்லாப் பாடங்களிலும் அதி விசேட சித்தி (D) பெற்றமை குறிப்பிடப்படவேண்டியது. இவ் வருடம் மேற்படி பரீட்சைக்கு எமது பாடசாலையிலிருந்து 159 மாணவிகள் தோற்றுகிறார்கள்.

எமது கல்லூரி ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம், எம்மைச் சூழவுள்ள பிரதேச மாணவிகள் கல்வி கற்பதற்கு எமது பிரதேசத்தில் ஒரு பெண்கள் கல்லூரி இருக்கவேண்டும் என்பதாகும் என முன்னர் குறிப்பிட்டோம். ஆனால் முன்பு பரீட்சார்த்தமாக நடாத்தப்பட்ட ஆண்டு 6—11 வரையான வகுப்புகளிலேயே இன்னமும் மாணவிகள் இங்கே கல்வி கற்க முடிகிறது. க. பொ. த. (சா. த.) பரீட்சைக்குத் தோற்றிய எமது மாணவிகளில் கணிசமான தொகையினர் க. பொ. த. (உ. த.) வகுப்பிற் கல்வி கற்கத் தகுதி பெற்றிருந்தும் இங்கே தொடர்ந்து கல்வி கற்கக் கூடிய வாய்ப்பு அவர்கட்கு இன்னமும் அளிக்கப்படவில்லை. கல்விப் பணிப்பாளர், பிரதிக் கல்விப் பணிப்பாளர், எமது கொத்தணி அதிபர் மற்றும் உயர் அதிகாரிகள் சகலரும் எமது மாணவிகள் இவ் வாய்ப்பைத் தாமதியாது பெறுவதில் ஒத்துழைப்பு நல்கி, எமது கல்லூரி அமைக்கப்பட்ட நோக்கத்தைப் பூரணப்படுத்த வேண்டும் எனக் கல்லூரி சார்பில் கேட்கிறேன். எமது கோரிக்கை நீதியானது என்பதால் அது நிறைவேற அவர்கள் உதவி கிடைக்கும் என பூரணமாக நம்புகிறேன்.

**விளையாட்டுத்துறை: —**

எமது கல்லூரி அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட வேளையிலே எமக்கென ஒரு விளையாட்டிடம் இல்லாமை பெருங்குறையாக இருந்தது, அயலவரான திருமதி இ. புலேந்திரா அவர்களை அணுகிய போது, அவர் தன் வளவிலே ஒரு பகுதியை நாளாந்தப் பயிற்சிக் களமாகப் பயன்படுத்தும்படி மனமுவந்து அளித்தார். எமது கல்லூரி நலன்விரும்பிகள் முயற்சியால் பற்றைகள் நிறைந்திருந்த அக்களம் சுத்தம் செய்யப்பட்டு விளையாட்டுத் திடலாக மாறியுள்ளது. திருமதி புலேந்திரா அவர்கட்கும் சம்பந்தப்பட்ட நலன்விரும்பிகட்கும் எங்கள் மனம் நிறைந்த நன்றிகள்.

இல்ல மெய்வன்மைப் போட்டியை நடாத்துவதற்கு இப்பயிற்சிக் களத்தின் விஸ்தீரணம் போதாதிருந்ததால், அப்போட்டியை நடாத்துவதற்குச் சமீபத்திலுள்ள தோட்டச் சொந்தக்காரர்கள் சிலர் தம் தோட்ட நிலங்களை மனமுவந்தளித்தனர். கடந்த ஆனி மாதம் நான்காம் திகதி அவ்விடத்தில் எமது கல்லூரியின் முதலாவது இல்ல மெய்வன்மைப் போட்டியைச் சிறப்புற நடாத்திமுடித்தோம் மெய்வன்மைப் போட்டிக்கு நிதியுதவியும் உடலுழைப்பும் நல்கியவர்கள் எமது கல்லூரி நலன் விரும்பிகளும் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களும் ஆவர். இவர்களுதவியை நாம் மறக்கமுடியாத ஒன்று. போட்டி நடாத்த நிலமுதவிய தோட்டச் சொந்தக்காரர்கட்கும் எமது நன்றிகள்.

எமது மாணவிகள் இவ் வருடம் கல்லூரி மெய்வன்மைப் போட்டிகளிற் சிறப்புறப் பங்கேற்றதோடு கொத்தணி மட்ட, கோட்ட மட்டப் போட்டிகளிலும் முன்னிடம் வகித்துள்ளார்கள். கொத்தணி மட்டப் போட்டிகளில் உடற்பயிற்சிப் போட்டிகளில் எமது மூன்று குழுக்களில் இரு குழுக்கள் முதலிடமும் ஒரு குழு இரண்டாம் இடமும் பெற்றன. கோட்டமட்ட மெய்வன்மைப் போட்டியில் முதலாம் - இரண்டாம் – மூன்றாமிடங்களையும் பல மாணவிகள் பெற்றுள்ளனர்.

**பாடசாலைமட்டப் போட்டிகள்:-**

எமது கல்லூரியில் காவேரி, கங்கை, யமுனை என மூன்று இல்லங்களாக மாணவிகள் பிரிக்கப்பட்டுள்ளனர். இல்லரீதியாக மெய்வன்மைப் போட்டி மட்டுமன்றி இவ்வருடம் கட்டுரை, பேச்சு, கவிதைப் போட்டிகளை ஆண்டுமட்டத்தில் நடாத்தியுள்ளோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொத்தணி மட்ட, கோட்ட மட்டப் போட்டிகள்:**

மேற்படி மட்டங்களில் தமிழ்த்தினப் போட்டிகளிலும் ஆங்கிலதினப்போட்டிகளிலும் எமது மாணவிகளின் சாதனை மகத்தானது. மேற்படி தமிழ்த்தினப் போட்டிகளில் முதற் பரிசு பெற்று, மாவட்டப் போட்டிகளிற் கட்டுரை, கவிதையாக்கம், பேச்சு, தனி நடனம், நாட்டிய நாடகம் ஆகிய போட்டிகளில் எமது மாணவிகள் பங்குபற்றினர். மாவட்டப் போட்டியில் செல்வி சி. கவிதாவின் நடனம் பலரது பாராட்டுக்களையும் பெற்று முதலிடம் வகித்தது இங்கே குறிப்பிடத் தக்கது.

கோட்டமட்ட ஆங்கில தினப் போட்டியிலே எமது மாணவிகள் 16 முதலிடங்களையும் 13 இரண்டாமிடங்களையும் 12 மூன்றாமிடங்களையும் பெற்று முன்னணியில் நின்றனர்.

**சமயத்துறை:**

சமயம் என்பது வாழ்க்கை நெறி. மாணவர்களின் சமய அறிவை வகுப்பறைக் கல்வியால் மட்டும் குறிப்பிடக் கூடிய அளவு வளர்த்துவிட முடியாது. இதனால் வெள்ளி ஆராதனை நவராத்திரி விழா, போன்றவை நடாத்தப்பட்டு, மாணவிகளின் சமயப் பற்றும் சமய அறிவும் வளர்க்கப்படுகிறது யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை நடாத்தும் சைவ சமயப் பரீட்சையிலும் எமது மாணவிகள் தோற்றிச் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளார்கள்.

**மாணவர் தேர்ச்சிச் சங்கங்கள்:**

மாணவர்கள் திறன்கள் பல நிறைந்தவர்கள். அவர்களிடமிருக்கும் திறன்களை இனங்கண்டு வெளிக்கொணர்ந்து வளர்க்க, மாணவர் தேர்ச்சிச் சங்கங்கள் மிகவும் உதவி புரிவன. எமது கல்லூரியில் ஆண்டு 6—8 வரையான மாணவிகளும், ஆண்டு 9—11 வரையான மாணவிகளும் வெவ்வேறாக மாதமிருமுறை கூட்டங்களை நடாத்துகிறார்கள்.

ஆண்டு 9—11 வரையான மாணவிகட்கு வேறாக வணிக மன்றமும் அமைக்கப்பட்டுள்ளது.

**நூலகம்:**

வாசிப்பு ஒருவனைப் பூரண மனிதனாக்குகிறது. வாசிப்பதற்கு வசதியாகப் பலதுறை நூல்கள் ஒரு கல்வி ஸ்தாபனத்திற் காணப்படவேண்டியது அவசியம். எமது கல்லூரி நூலகத்தில் நூல்கள் குறைவாயுள்ள வறுமை நிலை பெரிய குறைபாடாகும். இக் குறைபாட்டை நீக்கும்வகையில் எமது மாணவிகள் நூல்களை அன்பளிப்புச் செய்துகொண்டிருக்கிறார்கள். இக் கல்லூரியின் வளர்ச்சியை அக்கறையோடு நோக்கும் அன்பர்களே. இக் குறையைப் போக்க நீங்களும் உதவுங்கள். ''சிறு துளி பெரு வெள்ளம்''.

**சிற்றூழியர்கள்:**

நிரந்தர பதவி பெற்ற சிற்றூழியர் யாரும் இதுவரை எமது பாடசாலைக்கு நியமிக்கப்படவில்லை. எமது லிகிதர், வசதிகள் சேவைகள் கட்டணத்தின் கீழ் கடமை புரிபவர். நிவாரண காவலாளி என்ற வகையில் திணைக்களத்திடம் வேதனம் பெறுகிறார் எமது காவலாளி. சுகாதாரத் தொழிலாளிகள் யாருமற்ற நிலை மிகப் பெரிய குறை.

**சிற்றுண்டிச் சாலை:**

கட்டைவேலி—நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் ஏற்படுத்தப்பட்டது எமது பாடசாலைச் சிற்றுண்டிச்சாலை. மாணவிகட்கும், ஆசிரியர்கட்கும், விருந்தினர்கட்கும் பயனுள்ள வகையில் இச் சாலை தன் சேவையை ஆற்றிவருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சபை:**

எமது பாடசாலை நலனிற் கண்ணும் கருத்துமாக இருக்கும் எமது பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் எமது மெய்வன்மைப் போட்டியில் ஆற்றிய சேவை போற்றற்குரியது. ''நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மகளிர் பிரிவாக நாம் இயங்கியபோது இங்கே கற்றவர்கள் அனைவரும் எமது பழைய மாணவிகள் என்ற சிறந்த தீர்மானத்தையும் இச் சங்கம் நிறைவேற்றியுள்ளது.'' இவ்வாறான பழைய மாணவர் சங்கம் ஒன்றை நாம் 1993ம் ஆண்டு ஏற்படுத்தவுள்ளோம்.

திணைக்களப் பணிப்பின் பேரில் சமீபத்தில் ஆரம்பிக்கப்பட்டது பாடசாலை அபிவிருத்திச் சபை. இந்த ஓராண்டு விழாவைச் செவ்வனே நிறைவு செய்ய அபிவிருத்திச் சங்கத்துடன் இணைந்து இது செயலாற்றுகிறது.

**பாடசாலை நலன் விரும்பிகள் சங்கம்:**

எமது பாடசாலை நலன் விரும்பிகள் பாடசாலையின் துரித வளர்ச்சியை நோக்காகக் கொண்டு தமக்குள் சங்கமொன்றை நிறுவியுள்ளனர். பாடசாலைக் கருமங்கள் பலவும் நிதித் தடங்கலின்றி நிகழ அவர்கள் உதவிக்கொண்டிருப்பதுடன் சரீர உழைப்பையும் நல்கிக்கொண்டிருக்கிறார்கள். நலன் விரும்பிகள் நிதியையும் அவர்கள் ஆரம்பித்துள்ளார்கள்,

**வேண்டுகோள்:**

எமது பாடசாலை வளர்ச்சியில் அக்கறைகொண்ட எமது பிரதேச மக்களே, அயலூரவர்களே, பெற்றோர்களே. அன்பர்களே, பெரியோர்களே,

உங்களால் இயன்ற உதவி செய்து எமது பாடசாலையை வளர்த்தெடுங்கள். தான் வளருமளவுக்கு உங்கள் பரம்பரைக்கும் சமுதாயத்துக்கும் அது உதவி செய்யும். உங்கள் உதவி என்றும் வீண்போகாது

'கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு' என்ற ஔவை வாக்கை நினைவிலிருத்துவோம் என்று கூறிக்கொண்டு, இதுவரை இவ்வறிக்கையைப் பொறுமையோடு செவிமடுத்த உங்களனைவருக்கும் நன்றி தெரிவிப்பதுடன் இதுபோன்ற பல விழாக்களை எங்கள் கல்லூரித்தாய் கண்டு நீடு வாழ இறைவனைப் பிரார்த்தித்து விடைபெறுகின்றேன்.

நன்றி,
வணக்கம்.

யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.
வதிரி,
கரவெட்டி.
21-10-92

திருமதி ச. சுந்தரலிங்கம்
அதிபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி வரலாறு

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி 21-10-91ல் ஆரம்பமாகியிருந்தாலும் அதன் வரலாறு பல்லாண்டு காலம் பின்னோக்கிப் பார்க்கப்படவேண்டியது.

இற்றைக்கு ஏறக்குறைய நூற்று ஐம்பது வருடங்களுக்கு முன் வடமராட்சிப் பகுதி பல அரிய வளங்களும் நிறையப் பெற்று, சீரும் சிறப்புமிக்க பிரதேசமாக விளங்கியது. பல்வகைச் சிறப்புக்களும் ஏற்றமுடன் காணப்பட்ட போதிலும் அறிவு வளர்ச்சி பெற ஆக்கம் தரவல்ல கல்விச் சாலைகள் மிகக் குறைவாகவே காணப்பட்டன. அதுவும் ஆங்கிலக் கல்வியைப் பெற வாய்ப்பு மிகக் குறைவாகவே காணப்பட்டது. ஆங்கிலக் கல்வி கற்கவேண்டும், அக் கல்வியால் உயர்ச்சிகள் பல பெறவேண்டும் என பலர் ஆவல் கொண்டிருந்த காலமது.

அக்காலத்தில் மலாயாவிலிருந்து ஒரு பெரியார் நம் வடமராட்சிப் பகுதியை அடைந்தார். அவர் நவாலியூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். பல கல்விமான்கள் அவதரித்த பரம்பரையிலே அவதரித்தவர். பெருமைக்குரிய குறோசற் ஐயாத்துரை என நாமம் கொண்டவர். இவர் மலாயாவில் பல பெரும் பதவிகளை வகித்தவர். தம் மனையாளுடன் மனையாளின் ஊராகிய வடமராட்சியை வந்தடைந்தார், வடமராட்சி வளம்பல கொண்டு விளங்கியபோதிலும் அப் பகுதி மக்கள் கல்வியால் வளமாக்கப்படவில்லை என்னும் குறையை உணர்ந்தார். கல்வியின் அருமை பெருமைகளை நன்குணர்ந்தவரும், கல்விப் பெரும்பேற்றைப் பெற்றவருமாகிய பெரியார் குறோசற் ஐயாத்துரை அவர்கள் இப் பகுதியில் ஒரு பாடசாலையை ஸ்தாபிக்க பெரு முயற்சி மேற்கொண்டார். இம் முயற்சியின் பயனாக ஏக்குறைய 1845ம் ஆண்டளவில் இப் பகுதியில் ஒரு பாடசாலை ஸ்தாபிக்கப்பட்டது. இதுவே இப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட முதல் ஆங்கில பாடசாலை என்ற பெருமையையும் தட்டிக்கொண்டதோடு 'வடமராட்சி மத்திய ஆங்கில பாடசாலை' என்னும் பெயரையும் பெற்றது.

வடமராட்சி மத்திய ஆங்கில பாடசாலை பெரியாரின் பெரு முயற்சியால் 'நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக' வளர்ச்சி கண்டது. இப் பாடசாலையில் அக் காலத்தில் சிரேட்ட கல்வியாக விளங்கிய 'ஸ்கூல் வயினல்' (School Final) வரை ஆங்கிலக் கல்வியைப் பெற வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டன. அரிய கல்விச் சேவையை மேற்கொண்ட பெரியார் தன் சொந்தத் தேவைகளை எல்லாம் உதறித்தள்ளிவிட்டு, மாணவர்களை வீடுவீடாகச் சென்று அழைத்து வந்து கல்வியறிவை ஊட்டிய பெருமைக்குரியவராக விளங்கினார். அவர்தம் பெருமையை புகழ்ந்து பாராட்டும் நம் மூதாதையர்கள் இன்றும் நம் மத்தியில் உள்ளார்கள். இப் பாடசாலையில் கல்வி கற்று உயர் பதவிகளில் சேவையாற்றி ஓய்வு பெற்றிருக்கும் மூதாதையரும் நம் மத்தியில் இன்றும் உள்ளார்கள் என்பது நமக்கெல்லாம் பெருமையைத் தருகின்றதல்லவா!

வடமராட்சிப் பகுதியில் ஆங்கிலக் கல்விக்கு வித்திட்ட பெரியார் குறோசற் ஐயாத்துரை அவர்கள் மீண்டும் மலாயா செல்லவேண்டிய காரணத்தால் இப் பாடசாலையின் பொறுப்புக்கள் யாவற்றையும், இப் பகுதி உயர்குடித் தோன்றலும், சிறந்த அறத்தொண்டு. சமயத் தொண்டு, கல்வித் தொண்டு ஆகியவற்றால் உயர்ந்தோருமாகிய நீதவான் செல்லையர் என மக்களால் அன்போடும் பாசத்தோடும் அழைக்கப்பட்ட திருவாளர் நாகலிங்கம் கனகசிங்கம் என்பாரிடம் ஒப்படைத்தார். திருவாளர் நாகலிங்கம் கனகசிங்கம் அவர்கள் நாகலிங்க உடையாரின் அருமை மகனும், சிறந்த கல்விமானுமாவர். நீதவான் தொழில் செய்தமையால் நீதவான் செல்லையர் எனவும் காரணப் பெயர் பெற்றார். வடமராட்சி மத்தி சிறக்க கனகரத்தினப் பிள்ளையார், செட்குடியிருப்பு வைரவர், கண்ணகை அம்மன் ஆகிய ஆலயங்களை அமைத்து அளப்பரிய சமயத்தொண்டும் செய்தவராவார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணிநிலமற்றோருக்கு காணிகள் கொடுத்து குடியமர்த்திய பெரியார், இத்தொண்டுக ளோடு கல்வித் தொண்டையும் பெரிதெனக்கொண்டு வடமராட்சி மத்திய ஆங்கில பாட சாலையின் வளர்ச்சியிலே பெரிதும் ஈடுபாடு கொண்டார். இதன்பொருட்டு வெளிநாடுகள் சென்று நிதி திரட்டி, தம் சொந்தக் காணியிலே பெரிய T அமைப்புக் கொண்ட பாட சாலை மண்டபத்தை அமைத்தார். இதற்கு ஏற்பட்ட பெரும் செலவையும், செயலையும் தானே முன்னின்று கவனித்து 1917—1918ம் ஆண்டளவில் தற்போதுள்ள வடமத்திய மகளிர் கல்லூரி என்னும் பாடசாலையை அப்போது ஸ்தாபித்தார். தொன்றுதொட்டு வழங்கப்பட்ட "வடமராட்சி மத்திய ஆங்கில பாடசாலை" என்னும் பெயரே சிறப்பாக இப் புதிய பாடசாலைக்கும் அமையப்பெற்றது. இப் பாடசாலையில் சிரேட்ட கல்வியை பெறும் வாய்ப்பும் இப் பகுதி மக்களுக்கு ஏற்பட்டது. சைவத்தின் சிறப்பிடமாகவும் இப் பாட சாலை அமைந்தது. பெரியார் கனகசிங்கம் அவர்கள் பாடசாலை வளர்ச்சியில் அயரா து உழைத்தமையால் இப் பாடசாலை வடமராட்சிப் பகுதியில் ஓர் உன்னத நிலையை அடைந்து விளங்கியது. பாடசாலை வளர்ச்சியின் பொருட்டு இந்தியா சென்று சிறந்த கல்விமான்களை அழைத்துவந்து இப் பாடசாலையின் அதிபர், ஆசிரியராகவும் அமர்த்தி னார். இப்படி அழைத்துவரப்பட்டவர்களில் சுப்பிரமணிய ஐயர், ரீ. என். சீதாராம ஐயர், ஆர் சுந்தராச்சாரியார், எம். எஸ். ராஜகோபாலாச்சாரியார். திரு. இமானுவல், திரு செபஸ் தியன் என்போர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களோடு இக் காலப்பகுதியில் அதிபர்களாக விளங்கிய திரு. J. B. மார்க்கண்டு, திரு. N. கிருஷ்ணபிள்ளை, திரு. K. பொன்னுத்துரை, திருமதி மீனாட்சி பொன்னுத்துரை, திரு. V. தம்பிப்பிள்ளை, திரு. V. நடராசா, ஆகி யோர் காலத்திலும் இப் பாடசாலை இடைவிடாத பெருவளர்ச்சியைப் பெற்று வந்த தென்பதை பெரு மகிழ்ச்சியோடு அறியக்கூடியதாய் உள்ளது.

எல்லாவற்றுக்கும் மேலாக திரு. எம். எஸ். இராஜகோபாலாச்சாரியார் அதிப ராக விளங்கிய காலத்தில் இப் பாடசாலை ஒரு பெரும் மலர்ச்சியைக் கண்டது ஆங் கிலத்தில் சிறந்த பெறுபேறுகளை ஈட்டி நாடறிந்த நற் கல்லூரியாக மிளிர்ந்தது. அக் காலத்தில் இக் கல்லூரியால் வளர்ந்த பல அறிஞர்கள், மேதைகள் அதிபர் இராஜ கோபாலாச்சாரியாரின் பெருமைகளைப் பாராட்டிப் புகழ்வதில் பெருமை கொள்கின் றனர்.

இப்படியாக எமது பாடசாலை வளர்ச்சிக்கு அரும்பெரும் தொண்டாற்றிய ஸ்தாப கர் பெரியார் கனகசிங்கம் அவர்கள் பெரும் பாராட்டுக்குரியவர் ஆவார், அவரின் முகா மைத்துவத்தில் பாடசாலை பல சாதனைகளையும் பல பெருமைகளையும் தேடிக்கொண் டது. இப்படியாக வளர்ந்து பரந்து விருட்சமாகி வருங்காலை, வந்தது 1960ம் ஆண்டு. இந்த ஆண்டு பாடசாலையின் வளர்ச்சிக்கு ஒரு தாழ்வு காலம் தென்பட்டது போல, அரசு சகல பாடசாலைகளையும் பொறுப்பேற்றது, அச் சூழலில் நம் வடமராட்சி மத்திய கல் லூரியும் ஆக்கப்பட்டது, அரச பாடசாலையாக மாற்றமடைந்தபின் 1970ம் ஆண்டு இப் பாடசாலை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்துடன் இணைக்கப்பட்டு ஆரம்ப வகுப்பு களைக் கொண்ட அதன் ஆரம்பப் பிரிவாக மாற்றப்பட்டது. அதன் தலைமை ஆசானாக திரு. செ. ஏரம்ப சர்மா அவர்கள் கடமையாற்றினார். நெல்லியடி ம. ம. வியுடன் இணைக் கும்போது அன்றைய யாழ். பிரதேசக் கல்விப் பணிப்பாளர் திரு. R. மாணிக்கவாசகர் அவர்கள், வசதியும் வாய்ப்பும் ஏற்படும்போது இதை ஒரு மகளிர் கல்லூரி ஆக்குவோ மென்றார். அக் கனவு இன்று நனவாகிறது.

1974ம் ஆண்டு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் ஆரம்ப வகுப்புகள் இல் லாமற்போக, க. பொ. த. (சா. த.), க. பொ. த. (உ. த.) கலைத்துறை வகுப்புக்கள் அனைத்தும் இக் கல்லூரி வளவில் நடாத்தப்பட்டன. திரு. வி. மகாலிங்கம் அதன் தலைவ ராயிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மகளிர் கல்லூரிக்கு அத்திவாரம்:**

இவ்வேளையிலே, வடமராட்சிக் கல்விமான்கள் பலரும் இப் பிரதேசத்தில் ஒரு பெண்கள் கல்லூரி அவசியம் எனக் கருதியதன் பேரில் 1975ல் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் அப்போது அதிபராயிருந்த திரு. க. குணரத்தினம் அவர்கள் தலைமையில் அவ் வித்தியாலய அபிவிருத்திச் சங்கத்தினர் கூடி, இக் கருத்தை பொதுச்சபைத் தீர்மானமாக நிறைவேற்றி திணைக்களத்திடம் சமர்ப்பித்தனர். அத் தீர்மானம் செவிமடுக்கப்பட்டு' 'மிகக் குறுகிய காலத்தில் ஒரு மகளிர் கல்லூரி அமைவதை நோக்காகக் கொண்டு, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தின் மகளிர் பிரிவு, முன்னைய வடமத்திய கல்லூரி வளவில் ஆரம்பிக்கப்படவேண்டும்' எனக் கல்வித் திணைக்களம் பணித்தது. அப் பணிப்பின் பேரில் 1-1-1976ல் திரு. ஆ. இராசரத்தினம் அவர்கள் தலைமையில் தரம் 6—9 வரை வகுப்புகள் கொண்டதாய் ஆரம்பிக்கப்பட்டது நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மகளிர் பிரிவு.

சுமார் ஏழு வருடங்கள் மிகச் சிறப்பாகத் தன் கடமையை ஆற்றி, மகளிர் பிரிவை வளர்த்த திரு. ஆ. இராசரத்தினம் அவர்கள் 24-7-82ல் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்துக்கு உப அதிபராகச் சென்றதன் பேரில் திருமதி ச. சுந்தரலிங்கத்திடம் மகளிர் பிரிவுப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. எவ்வித தடங்கலுமின்றித் தொடர்ச்சியாக, மகளிர் பிரிவு முன்னேற்றப் பாதையில் வீறுநடை போட்டது.

மகளிர் பிரிவு ஆரம்பித்து தொடர்ந்து நடைபெற்ற காலங்களில் அங்கே மாணவிகள் காட்டிய சாதனைகள் மகத்தானவை. கல்வி, விளையாட்டு, சங்கீதம், நடனம் முதலிய பல துறைகளிலும் அம் மாணவிகள் முன்னணியில் நின்றனர்.

**மகளிர் பிரிவு – கல்வித்துறை வளர்ச்சி:**

1. க. பொ. த (சா. த) பரீட்சைக்குத் தோற்றிய மாணவிகளில் பெரும்பாலும் வருடா வருடம் அரைப் பங்கிற்கு மேற்பட்டோர் க. பொ த (உ. த.) வகுப்புகளிற் கற்கத் தகுதி பெற்று வந்திருக்கிறார்கள், பெரும்பாலும் வருடா வருடம் உயர் பெறுபேறு பெறும் மாணவிகள் எல்லாப் பாடங்களிலும் அதி விசேட சித்தி (D) பெற்று வருகிறார்கள். 1989ல் இவ்வாறாக 4 மாணவிகள் 8 D பெற்றிருந்தனர்.

மகளிர் பிரிவிற் கல்வி கற்ற மாணவிகள் பலர் இன்று மருத்துவம், கணிதம், விஞ்ஞானம். கலை, வர்த்தகம் ஆகிய துறைகளிற் பட்டம் பெற்று விளங்குகிறார்கள்.

**போட்டிகளில் முன்னிடம்:**

உடுப்பிட்டி வட்டாரப் பாடசாலைகட்கிடையிலான தமிழ்த் தினப் போட்டிகள், ஆங்கிலத் தினப் போட்டிகள், பண்ணிசைப் போட்டிகள், இசை நடனப் போட்டிகள் பலவற்றிலும் யாழ் மாவட்டப் பாடசாலைகட்கிடையிலான மேற்கண்ட போட்டிகளிலும் வருடாவருடம் மாணவிகள் முதலாம் பரிசு உட்படப் பல பரிசுகள் பெற்றுள்ளனர். அகில இலங்கை இசைப் போட்டிகளில் மட்டக்களப்பிற் பங்குபற்றும் வாய்ப்பும் மாணவிகட்குக் கிடைத்தது.

**சமயம்:**

வெள்ளி ஆராதனைகள், நாயன்மார் குருபூசைகள் ஆகியன சிறப்புற நடாத்தப்பட்டன. கொழும்பு விவேகானந்த சபை, யாழ் சைவபரிபாலன சபை ஆகியன நடாத்தும் சைவ சமயப் பரீட்சைகளில் அகில இலங்கைப் பரிசு உட்படப் பல பரிசுகள் மாணவிகளாற் பெறப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விளையாட்டுத்துறை முன்னேற்றம்:**

1. மகளிர் பிரிவுக்கென விளையாட்டுத் திடல் ஒன்று இல்லாதிருந்த போதும் பெண்கள் கல்லூரிகள் உட்படப் பல கல்லூரிகள் பங்குபற்றிய உடுப்பிட்டி வட்டார மெய் வல்லுநர் போட்டிகளிற் பல தடவைகள் பெண்களுக்கிடையே மகளிர் பிரிவு முதலிடம் பெற்றது.

2. உடுப்பிட்டி வட்டார எறிபந்தாட்ட வீராங்கனைகளாகப் பல தடவைகள் மகளிர் பிரிவு மாணவிகள் தெரியப்பட்டனர்.

3. உடற் பயிற்சிப் போட்டிகளில் 1976 தொடக்கம் பல தடவைகள் முதலாம் பரிசு உட்படப் பல பரிசுகள் பெற்றனர்.

4. யாழ் மாவட்ட பெண்கள் கல்லூரிகட்கு இடையிலான மெய் வல்லுநர் போட்டிகளில் நிகழ்ச்சிகள் பலவற்றில் முதலிடம் பெற்றனர்.

5. யாழ் மாவட்டப் போட்டிகளில் முதலிடம் பெற்று அகில இலங்கை மெய்வல்லுநர் போட்டிகளில் பங்குபற்றிப் பரிசுகளும் பெற்றனர்.

மேற்கண்டவாறாக மகளிர் பிரிவின் முன்னேற்றம் பெற்றோரை மிகவும் கவர்ந்ததால் வகுப்பறைகள், சுற்றுமதில்கள், கேற் முதலியவற்றைப் பெற்றோர் அமைத்துதவினர், அரசினால் மேல்மாடிக் கட்டிடமொன்றும் கட்டப்பட்டது.

**மகளிர் கல்லூரி உதயம்:**

நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மகளிர் பிரிவு எந்த நோக்கத்துக்காக அமைக்கப்பட்டதோ அந்த நோக்கத்தைப் பூரணமாக நிறைவேற்றியதாலும் அது மகளிர் கல்லூரியாக்கப்படவேண்டியதன் அவசியத்தை அடிக்கடி பெற்றோர் வலியுறுத்தியதாலும் கல்வியமைச்சினால் 1991ம் ஆண்டு ஜனவரியில் யாழ் கல்வித் திணைக்களத்திடம் விவரங்கள் கோரப்பட்டுப் பெறப்பட்டன.

நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அதிபர், வடமராட்சிக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் சமர்ப்பித்த அறிக்கைகளின் அடிப்படையில் யாழ்க ல்வித் திணைக்களமானது சாதகமான அறிக்கையொன்றை அனுப்பியதன் பேரில், நெல்லியடி ம. ம. வி. மகளிர் பிரிவு, வடமத்திய மகளிர் கல்லூரி என்ற பெயரில் 7-6-1991 தொடக்கம் தனித்தியங்க கல்வியமைச்சு பணித்தது.

இடையிலேற்பட்ட சில தடைகளால் கல்வியமைச்சின் பணிப்பை யாழ் கல்வித் திணைக்களம் உடனடியாக நிறைவேற்ற முடியாது போயிற்று. சில மாத இடைவெளியில் தடைகள் அகற்றப்பட்டு, 21-10-1991 தொடக்கம் சில காலம் 'நெல்லியடி மகளிர் கல்லூரி, என்ற பெயரில் எம் கல்லூரி தனித்தியங்க யாழ் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் அவர்கள் வழி செய்தார் இன்று எமது கல்லூரி, தனக்குரிய பெயரான 'வட மத்திய மகளிர் கல்லூரி' என்ற பெயரில் இயங்கும் அனுமதியைப் பெற்றியங்கத் தொடங்கி விட்டது

வாழ்க எமது கல்லூரி! வளர்க அதன் புகழ்!

குறிப்பு: கல்லூரி வரலாற்றின் தொன்மைக் குறிப்புகளைத் தந்துதவியோர்:
திரு. வ. கனகசபை, திரு. ஆ. கணபதிப்பிள்ளை, திரு. க, இராசையா,
திரு. வ. மயில்வாகனம் இவர்கட்கு எமது நன்றிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை அபிவிருத்திச் சபையின் ஆத்மராகங்கள்

நீண்டகாலமாக நெல்லியடி, கரவெட்டிக் கொத்தணிகளை உள்ளடக்கிய கல்விப்பிரதேசத்தில் மகளிர் கல்லூரி வேண்டுமென்றகுரல் ஒலித்து வந்த ஒன்று. சிந்தனையாற்றலும் மனிதாபிமானமும் உள்ள அனைவருமே இத்தகைய தேவையை ஒரேமுகமாக இரண்டு தசாப்தங்களாக எழுப்பியதன் பயனாக "வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி" உதயமானது.

எமது இக்கல்லூரி வளர்ச்சிப் பாதையில் வெற்றிநடைபோட்டு வருவதையிட்டு உள்ளம்பூரிக்கின்றோம். 21-10-91 அன்று கல்லூரி கால்கோளான அன்றே எமது பாடசாலை அபிவிருத்திச் சங்கம் கல்லூரி மேம்பாட்டை நோக்கமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. தொடக்க காலப் பாரிய தேவைகளைக் கருத்திலே கொண்டு தற்காலிக விளையாட்டு மைதானம் ஒன்றை ஒழுங்கு செய்து மெய்வல்லுநர் போட்டியைக் கல்லூரியுடன் இரண்டறக் கலந்து நின்று நடாத்தினோம்.

இக்கல்லூரியின் கடந்தகாலப் பரீட்சைப் பெறுபேறுகளையும், சாதனைகளையும் கருத்திலே கொண்டு க பொ. த, (உ/த) வகுப்புகளை ஆரம்பிக்க வேண்டிய அவசியமான, அவசரமான தேவைகளையும் உணர்ந்து கொண்ட நாம் இத்தேவைகளை நிறைவு செய்யத் திடசங்கற்பம் பூண்டுள்ளோம்.

எம் மகிழ்வுக்குரிய இச் சந்தர்ப்பத்தில் கல்லூரியின் தேவைகளை உணர்ந்து காலத்தால் உதவிய உள்ளங்கள் அனைவருக்கும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளோம். யாழ். மாவட்டத்தில் சிறந்த கல்விப் பெறுபேறுகளையும், வியத்தகு சாதனைகழையும் இக்கல்லூரி பெறுவதற்கும், இன்னும் விழுமிய ஒழுகலாற்றுக்கு மாணவச் செல்வங்களை ஆற்றுப்படுத்துகின்ற அதிபரும், ஆசிரியப் பெருந்தகைகளுக்கும் எமது இதயங்கனிந்த நன்றியறிதல்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்,

**செயலாளர்கள்**

**வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி**
**பாடசாலை அபிவிருத்திச் சபை** *மற்றும்*
**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்**

வதிரி,
கரவெட்டி.
15-10-92

## நலன்விரும்பிகள் பார்வையில்.....

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி தனது ஒரு வருடகால தரிசனத்தில் வெற்றிநடை போடுவதையிட்டு நலன்விரும்பிகள் சங்கம் பெருமைப்படுகிறது. பிறநாட்டார் வணங்கும் கல்விமான்கள் பலரை ஈன்று புறந்தந்து பெரிதுவந்து நிற்கின்றது எம் வடமராட்சிப் பிரதேசம். இத்தகைய சிறப்பு வாய்ந்த எம் பிரதேசக் கல்வியாளரிடையே நீண்ட காலமாக வடமராட்சி மத்திய பிரதேசத்தில் மகளிர் கல்லூரி இல்லாத குறைபாடு இருந்து வந்தமை வேதனையைத் தந்துகொண்டிருந்தது.

எமது வடமராட்சிப் பகுதிக் கொத்தணிகளில் நெல்லியடி – கரவெட்டியை உள்ளடக்கிய பகுதிகளிடையே ஓர் மகளிர் கல்லூரி இல்லை. இவ் அவசியத் தேவையை உணர்ந்த வடமராட்சி மத்திய பகுதிக் கல்விமான்கள், தொழில் அதிபர்கள், நலன்விரும்பிகளது விடாமுயற்சியினால் எழுபதுகளில் அரும்பிய மகளிர் கல்லூரிச் சிந்தனை 1991ம் ஆண்டு ஒக்ரோபர் திங்கள் 21ம் நாள் மலராகியது.

வடமராட்சி மத்திய பிரதேச மாணவிகள் பண்புநிறை சூழலில் உயர் கல்வி பெற பதித்துவரும் துன்பச்சுவடுகள்; சுவர்க்க வாயில் எனக் கருதி பிரவேசத்திற்காக வாயிற் படிகளில் காத்து நிற்கும் பெற்றோர்களது அவலநிலை; போக்குவரத்து ஸ்தம்பிதம் என்பன இக்கல்லூரி உருவாகுவதற்கு உரந்தந்த காரணிகள். இந்த இளந்தென்றல் தங்கள் கற்பனை மாளிகைக்கு புயலாக வந்துவிடுமோ என பலர் அல்லல் படுகிறார்கள்.

இக்கல்லூரி ஆரம்பித்தபோது எவ்வித நிதி வசதியும் இல்லாதிருந்தது. நிதிவளத்தை மேம்படுத்த கல்விமான்கள், தொழிலதிபர்கள், நலன்விரும்பிகள் போன்ற அறிவு, ஆற்றல், உழைப்புமிக்க உன்னத உள்ளங்களினால் உருவாக்கப்பட்டது நலன்விரும்பிகள் சங்கம். சங்கத்தின் காப்பாளராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் திரு. அ. துரைராசா அவர்கள் அமைந்துள்ளமை எமது நற்பேறே. இக்கல்லூரியின் மேம்பாட்டிற்காகத் தன்னையே அர்ப்பணித்துள்ள அதிபர் திருமதி ச சுந்தரலிங்கம் அவர்களுக்கும் அவரது வழிகாட்டலில் சேவையே மனப்பாங்காகக் கொண்ட சிறந்த ஆசிரியர் குழாத்துக்கும் அவர்தம் வழிகாட்டலில் வெற்றிநடைபோடும் மாணவச் செல்வங்களுக்கும் நன்றி கூறுவதில் பெருமையடைகிறோம். காலம் அறிந்து இன்முகம் காட்டி நிதி வழங்கிய வள்ளல்களுக்கும், பல்வேறுவகையில் உதவி வழங்கிய நல்லிதயங்களுக்கும் தனித்தனி நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளோம்.

"அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல் .......
அன்ன யாயினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறிவித்தல்."

"நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்!
நிதி குறைந்தவர் காசுகள்தாரீர்!
அதுவு மற்றவர் வாய்ச்சொல் அருளீர்!........
எதுவும் நல்கியிங் கெவ்வகை யானும்
இப் பெருந் தொழில் நாட்டுவம் வாரீர்!"

க. பொ. த. (சா/த), உயர்தரத் தேர்வுகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று அகிலம் போற்ற வாழ வேண்டும். மேன்மேலும் எல்லா வளமும் பெற்று வையத்துள் வாழ்வாங்கு வாழ இறைவனை வேண்டுகின்றோம்.

நன்றி-

வதிரி,
கரவெட்டி.
21-10-92

**ஏ. சோமசுந்தரம்**
தலைவர், நலன்விரும்பிகள் சங்கம்
வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவிகளின் சாதனைகள்

*மாவட்ட மட்டப் போட்டிகளில் பரிசு பெற்ற எமது மாணவிகள்*

தனி நடனம்:

சி. கவிதா — 1ஆம் இடம்

கவிதை:

சி. சிவாஜினி — 2ஆம் இடம்

கட்டுரை:

ந. சாலினி — 3ஆம் இடம்

---

## வடமராட்சிக் கோட்ட மட்டத்தில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற எமது மாணவிகள்

1. தமிழ்த்தினப் போட்டி:

பிரிவு 3:

| | | |
|---|---|---|
| கட்டுரை: | ந. சாலினி | 1ஆம் இடம் |
| கவிதை: | சி. சிவாஜினி | 1ஆம் இடம் |
| பேச்சு: | க. ரேணுகா | 1ஆம் இடம் |
| நடனம்: (தனி) | சி. கவிதா | 1ஆம் இடம் |
| பிரிவு: 2 — பேச்சு: | அ. சுஜீவா | 2ஆம் இடம் |
| கட்டுரை: | அ. சுஜீவா | 2ஆம் இடம் |
| நடனம்: (தனி) | ப. திருஜா | 2ஆம் இடம் |
| நடனம்: (குழு) | | 2ஆம் இடம் |

பங்குபற்றியோர்:

| | |
|---|---|
| சி. தர்மிலா | அ. சுஜீவா |
| ப. திருஜா | த. துஷ்யந்தி |
| ந. பாமினி | பா. மஞ்சுளா |
| க. கமலினி | ம. ஜெயசுந்தரி |
| க. ஸ்ரீரம்மியா | செ. சர்மிலா |

நாட்டிய நாடகம் (திறந்த போட்டி) — 1ஆம் இடம்

பங்குபற்றியோர்:

| | |
|---|---|
| சி. கவிதா | ச. சஜிந்தா |
| கு. ராஜினி | த. தயாச்சந்திரிகா |
| ந. சந்திரிகா | சி. சுகதா |
| ப. பாமினி | வே. சுதர்சனா |
| க. ரேணுகா | ப. தயாவாணி |
| த. கவிதா | வே. கௌசல்யா |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ENGLISH DAY 1992
## *DIVISIONAL*

**Year 6. Recitation**

1st Urekha Rajendram 2nd Nrushna Thavarajah

**(Spelling) Dictation**

1st Anuratha Ambalavanar

**Reading Aloud**

1st Anuratha Ambalavanar 2nd Usitha Shanmugasuntharam

**Year 7. Recitation**

1st Abarna Kanakarajah 3rd Chandrika Rajendram

**Dictation**

2nd Tharmila Kandiah

**Reading Aloud**

1st Tharmila Sivarajah

**Picture Compositon**

2nd Tharmila Sivarajah 3rd Abirami Jeyaratnam

**Year 8. Recitation**

1st Bamini Navaratnam 2nd Nirujah Pathmanathan

**Dictation**

3rd Shanmugapriya Tharmagulasingam

**Reading Aloud**

1st Sujeeva Arulingam 3rd Jeyanthasri Balasundram

**Picture Composition**

1st Sujeeva Arulingam 3rd Shanmugapriya Tharmagulasingam

**Year 9. Dictation**

1st Srirenuka Velayuthapillai 3rd Logeswary Kopalasingam

**Reading Aloud**

1st Srirenuka Velayuthapillai

**Picture Composition**

3rd Logeswary Kopalasingam

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Year 10. Poem**

2nd Sriranjani Krishnan    3rd Brintha Sivarajah

**Oratory**

1st Kavitha Sivasothy    2nd Tharsini Rajaratnam

**Dictation**

2nd Tharsini Rajaratnam

**Reading Aloud**

1st Amitha Thavarajah    2nd Sivananthini Ponnudurai

**Picture Composition**

1st Kavitha Sivasothy    2nd Sriranjany Krishnan

**Year 11. Poem**

3rd Renuka Kanagaratnam 3rd Krishnapiraba Kathirgamathamby

**Oratory**

3rd Vasanthika Balachandran

**Dictation**

1st Subahary Balakrishnan    2nd Printhika Kandasamy

**Reading Aloud**

1st Printhika Kandasamy    2nd Mehala Kandiah

**Picture Composition**

1st Krishnapiraba Kathirgamathamby
2nd Subahary Balakrishnan

---

## இல்லங்களுக் கிடையிலான கவிதைப் போட்டி முடிவுகள் — 1992

| பெயர் | ஆண்டு | பெற்றஇடம் | இல்லம் |
|---|---|---|---|
| இ. தஷாந்தினி | 9 | 1 | காவேரி |
| து, றமணா | 9 | 2 | கங்கை |
| த. வாசுகி | 9 | 3 | யமுனை |
| சி. மணிமேகலை | 10 | 1 | யமுனை |
| கி சிறீறஞ்சினி | 10 | 2 | காவேரி |
| த. அமிதா | 10 | 3 | யமுனை |
| சி. சிவாஜினி | 11 | 1 | காவேரி |
| க. ரேணுகா | 11 | 2 | கங்கை |
| க. பிறிந்திகா | 11 | 3 | யமுனை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டுரைப்போட்டி முடிவுகள் — 1992

| பெயர் | ஆண்டு | பெற்றஇடம் | இல்லம் |
|---|---|---|---|
| மா. அனுசுயா | 6 | 1 | கங்கை |
| அ. அனுராதா | 6 | 2 | கங்கை |
| க. ராதிகா | 6 | 3 | காவேரி |
| க, அபர்ணா | 7 | 1 | காவேரி |
| சி. தர்மிலா | 7 | 2 | யமுனை |
| தி. காயத்திரி | 7 | 3 | காவேரி |
| வை. சுவேந்தினி | 8 | 1 | கங்கை |
| வி. துஷ்யந்தி | 8 | 2 | யமுனை |
| அ. சுஜீவா | 8 | 3 | கங்கை |
| இ. தஷாந்தினி | 9 | 1 | காவேரி |
| கோ. லோகேஸ்வரி | 9 | 2 | காவேரி |
| தி. சங்கீதா | 9 | 3 | யமுனை |
| சி. கவிதா | 10 | 1 | காவேரி |
| கி. சிறீரஞ்சினி | 10 | 2 | காவேரி |
| பொ. சிவநந்தினி | 10 | 3 | காவேரி |
| சி. சிவாஜினி | 11 | 1 | காவேரி |
| பா. சுபாஹரி | 11 | 2 | யமுனை |
| க. பிறிந்திகா | 11 | 3 | யமுனை |

## பேச்சுப்போட்டி முடிவுகள் — 1992

| பெயர் | ஆண்டு | பெற்றஇடம் | இல்லம் |
|---|---|---|---|
| அ. அனுராதா | 6 | 1 | கங்கை |
| த. நிரஞ்சனா | 6 | 2 | யமுனை |
| பு. ஷாழினி | 6 | 3 | கங்கை |
| இ. சந்திரிகா | 7 | 1 | யமுனை |
| செ. சங்கரி | 7 | 2 | கங்கை |
| ம. ஜெயசுந்தரி | 7 | 3 | யமுனை |
| அ. சுஜீவா | 8 | 1 | கங்கை |
| ந. பாமினி | 8 | 2 | காவேரி |
| ப. நிரூஷா | 8 | 3 | காவேரி |
| த. வாசுகி | 9 | 1 | யமுனை |
| பா. கலையரசி | 9 | 2 | காவேரி |
| செ. சாந்திகா | 9 | 3 | யமுனை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பெயர் | ஆண்டு | பெற்றஇடம் | இல்லம் |
|---|---|---|---|
| சி. கவிதா | 10 | 1 | காவேரி |
| அ. அருட்செல்வி | 10 | 2 | கங்கை |
| சி. மணிமேகலை | 10 | 3 | யமுனை |
| க. ரேணுகா | 11 | 1 | கங்கை |
| க. கிருஷ்ண பிரபா | 11 | 2 | யமுனை |
| பா. வசந்திகா | 11 | 3 | காவேரி |

## ஆண்டு ரீதியில் பாடங்களில் முன்னணி வகிப்போர்

| ஆண்டு | பெயர் | பாடம் |
|---|---|---|
| ஆண்டு 6: | அ. அனுராதா | தமிழ், சமயம் |
| | இ. யுரேக்கா | விஞ்ஞானம் |
| | செ. தாட்சாயணி | கணிதம் |
| | கி. துவாரகா | ஆங்கிலம் |
| | மா. அனுரூபா | சமூகக் கல்வி |
| ஆண்டு 7: | சி. தர்மிலா | சமயம். கணிதம், தமிழ் ஆங்கிலம். விஞ்ஞானம் |
| | க. தர்மிளா | சமூகக் கல்வி |
| ஆண்டு 8: | அ. சுஜீவா | சமயம், ஆங்கிலம் |
| | த. சண்முகப்பிரியா | கணிதம், தமிழ் விஞ்ஞானம், சமூகக் கல்வி |
| ஆண்டு 9: | வே. சிறீரேணுகா | சமயம், விஞ்ஞானம் |
| | கோ. லோகேஸ்வரி | கணிதம், ஆங்கிலம் |
| | தி. சங்கீதா | தமிழ் |
| | இ. தஷாந்தினி | சமூகக் கல்வி |
| ஆண்டு 10: | சி. கவிதா | சமயம், தமிழ், ஆங்கிலம், கணிதம் |
| | ப. துஷ்யந்தி | விஞ்ஞானம் |
| | யோ. ஜமுனா | சமூகக் கல்வி |
| ஆண்டு 11: | க. பிறிந்திக்கா | சமயம், கணிதம், தமிழ் ஆங்கிலம். சமூகக்கல்வி |
| | சு. சுலோசனாசூரியகுமாரி | விஞ்ஞானம் |

### முன்னணி மாணவிகள்

| | | | |
|---|---|---|---|
| ஆண்டு 6: | இ. யுரேக்கா | ஆண்டு 7: | சி. தர்மிலா |
| ,, 8: | த. சண்முகப்பிரியா | ,, 9: | கோ. லோகேஸ்வரி |
| ,, 10: | சி. கவிதா | ,, 11: | க. பிறிந்திகா |

க. பொ. த. (சா. த. பரீட்சை — டிசம்பர் 1991)

**மிகச் சிறந்த பெறு பேறு — செல்வி ந. சந்திரிக்கா - (7 D)**

(அழகியற் பாடத்துக்குரிய முடிவு இன்னும் வெளிவரவில்லை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும்
வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி
மேன்மேலும் வளர்ச்சியடைய வாழ்த்துகிறோம்.
முகாமையாளர் ஊழியர்கள்

# இலங்கை வங்கி

நெல்லியடி.



# Subhas

MAIN STREET, NELLIADY.

# சுபாஸ்

நெல்லியடி,
கரவெட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்துக் கலையும் அணைத்துக் கொண்டு
அன்னை மடியாய் வாழ்க வாழ்த்துக்கள்.

உ

இந்திரா கபே

பிரதான வீதி, நெல்லியடி.

இனிய வாழ்த்துக்கள்

Beacon Study Centre

ஆண்டு 6—11 வகுப்புக்களும்,
க. பொ. த. உயர்தர கலை, வர்த்தக, விஞ்ஞான வகுப்புக்களும்
நடைபெறுகின்றன.

உடுப்பிட்டி வதிரி, கரவெட்டி.

*இனிய வாழ்த்துக்கள்*
*எவர்சில்வர், பிளாஸ்ரிக் மற்றும் அன்பளிப்பு,*
*அழகுசாதனப் பொருட்களையும், புடைவை வகைகளையும்*
*பெற்றுக்கொள்ள இதயம் கலந்த ஸ்தாபனம்*

இதயன்ஸ்

பிரதான வீதி, நெல்லியடி.

250323

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரம் ஆண்டு
வாழ்க வாழ்கவென வாழ்த்துகிறோம்

# சாயி கிருஷ்ணா

எம்மிடம்:
பலசரக்கு - அழகுசாதனப் பொருட்கள் - பாடசாலை உபகரணங்களும்
பெற்றுக்கொள்ளலாம்.

வதிரிச் சந்தி — வதிரி — கரவெட்டி.

இனிய வாழ்த்துக்கள்

# வலம்புரிபுடைவை மாளிகை

பிரதான வீதி, நெல்லியடி.

இனிய வாழ்த்துக்கள்

# மஹாலக்ஷ்மி தங்கமாளிகை

பிரதான வீதி, நெல்லியடி.

முதலாம் ஆண்டு தரிசனத்தை அச்சிட வாய்ப்புத் தந்த
**வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி**
ஆல்போல் தளைத்து - அறுகுபோல் வேரூன்றி
மென்மேலும் வளர்ச்சியடைய
எமது நல்வாழ்த்துக்கள்.

# தமிழ்ப்பூங்கா அச்சகம்

நெல்லியடி, ★ கரவெட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியின்
முதலாவது ஆண்டு நிறைவையொட்டி

"தமிழீழத் தரணிதனில் மாதிரிக்கொரு
மகளிர் கல்லூரி என மிளிர வாழ்த்துகிறோம்."

---


## விக்னேஸ்வரன்

**வர்த்தக நிலையம்**

வதிரிச் சந்தி,
வதிரி, கரவெட்டி.

---

விசுவலிங்கம் நந்தகுமார்

## சித்திரா அப்பளம்

மணியாவத்தை, அல்வாய்.

---

## அம்பிகா வர்த்தக நிலையம்

பிரதான வீதி, நெல்லியடி.

---

## கற்பகவிலாஸ்

பொ. பரராசசிங்கம்
வதிரிச்சந்தி,
வதிரி, கரவெட்டி.

---

*பலசரக்கு சாமான்களை*
*மொத்தமாகவும், சில்லறையாகவும்*
*பெற்றுக்கொள்ள*

## திஸ்ஸ ஸ்ரோஸ்

பிரதான வீதி, நெல்லியடி.

---

## சர்வானந்தா வர்த்தக நிலையம்

பிரதான வீதி, நெல்லியடி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழா சிறக்க எம் இனிய வாழ்த்துக்கள்

# எஸ். கே. சாமி

## புத்தகசாலை

பிரதான வீதி, நெல்லியடி.

வாழ்த்துக்கள் பற்பல

# ஜெகா மோட்டோஸ்

பிரதான வீதி, நெல்லியடி.

ஆத்ம ராகங்களில் தமிழ் மணக்க
வாழ்த்துகிறோம்.

# ஸ்ரீ முருகன்

பிரதான வீதி, நெல்லியடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்கலாகா அரண். "

என்ற பொய்யாமொழிக்கு அமைய

எம் தாயகத்துக்கு அறிவொளி ஊட்டும்
ஞான விளக்காம் வடமராட்சி மத்திய
மகளிர் கல்லூரி நலம்சூழ என்றும்
வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

# கமலாஸ் அரிசி ஆலை

உடுப்பிட்டி வீதி,

வதிரி, கரவெட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி
# முதலாவது ஆண்டு நிறைவையொட்டி

ஆயகலைகள் அனைத்திற்கும் உறைவிடமாகத்
தூய கல்விக்கொரு புகழிடமாய்
நேயமுடன் நாடிவரும் மகளிர்க்கு
ஏயமுடன் உயர்வளிக்கும் வடமத்திய
மகளிர் கல்லூரியே வாழி!
பொறுமையுடன் பெருநடை பயின்று
திறமையுடன் நின்புகழ் பரப்ப
பெருமையுடன் வாழ்த்திடுவோம்.

அன்பான வாடிக்கையாளர்களே!

தரமும் அழகும் உள்ள

★ கறுப்பு, வெள்ளை

★ பாஸ்போட்

★ அடையாள அட்டை வகைகளுக்கும்

★ சிறந்த (Multi) உடன் கூடிய வண்ணப் படங்களுக்கும்

என்றும் நம்பிக்கையும் நாணயமுமான ஸ்தாபனம்

# அஜந்தாஸ் ஸ்ரூடியோ
## நெல்லியடி.

தற்போதைய அமைவிடம்:

பாடசாலை வீதி, வதிரி, கரவெட்டி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி
முதலாண்டு விழா சிறப்புற எமது வாழ்துக்கள்

* பாம் கொக்கோ பிஸ்கற்
* பாம் லெமன் பிஸ்கற்
* பாம் வினோ சோடா
* பாம் ஜாம்

மற்றும் உள்ளூர் உற்பத்திப் பொருட்களை நியாய விலைகளில் விற்க வாங்க வாருங்கள்.

**பனையகம்** நெல்லியடி, கரவெட்டி.

**கட்டைவேலி உடுப்பிட்டி**
**தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் - கரவெட்டி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதியதோர் உலகம் பிறக்க
மனித நேயம் சிறக்க
வாழ்த்துகிறோம்

"சிங்கம் ஸ்ரோர்ஸ்"

நவீன சந்தை, நெல்லியடி.



ஞான ஒளியினிலே மோன நிலைகாண
வாழ்த்துகிறோம்

ஸ்ரீ முருகன்

இல. 1, நவீன சந்தை, நெல்லியடி.



விழா சிறக்க
எம் இனிய வாழ்த்துக்கள்

கனகபார்வதி
சரவணாஸ்

பிரதான வீதி — நெல்லியடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்லாண்டு காலம் வாழ்க பாரினில் புதியன காண்க
இசையுடன் என்றும் வளர்கவென வாழ்த்துகிறோம்

# வேலவன் ஸ்ரோஸ்

பிரதான வீதி, பருத்தித்துறை.

கதிராய் மதியாய் விதியை வென்று நாளும்
புதிதாய் மிளிர்க வாழ்த்துகிறோம்.

# ச. சிறீதரன்

## தரன் நகை மாளிகை

பிரதான வீதி, பருத்தித்துறை.

காலத்தடத்தில் கனகமணி குலுங்கி
ஞாலம் போற்றிட வாழ்க

# விக்னேஸ்வரா பலசரக்கு விற்பனை நிலையம்

பிரதான வீதி, பருத்தித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம் இதயங்கனிந்த வாழ்த்துக்கள்

வடமராட்சியில் சிறந்த முறையில் சுகாதார முறைப்படி
சுவையான பேக்கரித் தயாரிப்புகள்

★ கேக் வகைகள் ★ பிஸ்கட் வகைகள்
★ பணிஸ்வகைகள் ★ ஐசிங் கேக் வகைகள்

**தாங்கள் விரும்பும் வகையில் சிறந்த முறையில்
செய்து கொடுக்கப்படும்**

*உற்பத்தி நிலையம்:*
**ராஜா பேக்கரி**
*மாலிசந்தி வீதி, நெல்லியடி,*

*விற்பனை நிலையம்:*
**துவாரகா பேக்கரி**
*பிரதான வீதி, பருத்தித்துறை*

---

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி
முதலாமாண்டு நிறைவையொட்டி எமது வாழ்த்துக்கள்!

## மொடேன் கல்வி நிலையம்,
கரவெட்டி.

*ஆண்டு 3 – ஆண்டு 10 வரையான வகுப்புக்களும்*
**G. C E. O/L** *மீட்டல் வகுப்புக்களும்*
**G. C. E. A/L** *கலை, வர்த்தக வகுப்புக்களும்*
*விஞ்ஞான வகுப்புக்களும் நடைபெறுகின்றன.*

இவை எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகிறது

*நிர்வாகி*

---

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியின்
முதலாவது ஆண்டு தரிசனத்துக்கு எங்கள் வாழ்த்துக்கள்

## டாக்டர் திரு. திருமதி இராதாகிருஷ்ணன்
## "மெடிக்கல் சென்ரர்"

நெல்லியடி

கரவெட்டி

விழா சிறக்க வாழ்த்துக்கள்
தேவையான பரிசுப் பொருட்களுக்கும்
அழகுசாதனப் பொருட்களுக்கும்

# நெல்லியடி சுப்பர் மார்க்கட்

பஸ் நிலையம்,

நெல்லியடி, — கரவெட்டி.

---

" எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும். "
வாழ்த்துக்கள் பற்பல

# மொடேோன் ஸ்ரோஸ்

பஸ் நிலையம்

நெல்லியடி, கரவெட்டி.

---

எமது அன்பான வாழ்த்துக்கள்

*ஆடவர் நங்கையர் விரும்பும் நாகரீகத்திற்கேற்ற*
*வெளிநாட்டு - உள்நாட்டு புடவைகளை எண்ணம்போல்*
*தேர்ந்தெடுக்க*
நெல்லை நகரில் ஏற்றதோர் புடவைப் பூஞ்சோலை

# புதிய சீமாட்டி புடவை மாளிகை

பிரதான வீதி, நெல்லியடி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும்

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி

விஞ்ஞான யுகத்தில் மெய்ஞானம் சிறக்கும்
பெருங்கலைக் கோயிலாக அறிவொளி வீச
வாழ்த்துகிறோம்.

கட்டைவேலி—நெல்லியடி

# பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

நெல்லியடி. — கரவெட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியின
முதலாவது ஆண்டு நிறைவையொட்டி

அன்பும், அறிவும், பண்பும் அமைதியும்
சங்கமிக்கும் அறிவாலயமாக விளங்க
வாழ்த்துகிறோம்.

*Maths Centre*

எமது நிறுவனத்தில் 93ம் ஆண்டு முதல்

ஆண்டு 4 தொடக்கம் ஆண்டு 11 வரையும்
உள்ள வகுப்புக்கள் நடைபெறும்.

A. L. விசேட தூய, பிரயோக கணித வகுப்புக்கள்
நடைபெறுகின்றன.

ஆசிரியர்:- திரு. அருளானந்தர்

- நல்லதையே செய்வோம் -

# Maths Centre

**Nelliady.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி ***********-*****************

ஓராண்டு நிறைவில்,
எம் கல்லூரி வரலாறு சிறு கைநூலாய்
வெளிவர வேண்டும் எனும் கரு
எம் அதிபர் சிந்தையிலே உதித்தது
இன்று பலருதவியுடன் உங்கள்
கரங்களிலே தவழ்கிறது
இந்நூலிற்கு
ஆசியுரை தந்த அறிஞர்கள்
வரலாற்றுக் குறிப்புகள் தந்துதவிய பெரியோர்கள்
கல்லூரியின் எதிர்கால ஆர்வங்களை வெளியிட்ட
பாடசாலை அபிவிருத்திச் சங்க
பாடசாலை அபிவிருத்திச் சபைச் செயலர்கள்
பாடசாலை நலன்விரும்பிகள் சங்கத் தலைவர்
ஆகியோருக்கும்
கல்லூரியை வாழ்த்தி விளம்பரங்கள் தந்த
பொது நிறுவனங்கள்
தனியார் கல்வி நிலையங்கள்
வர்த்தக நிறுவனங்கள் ஆகியவற்றிற்கும்
இந் நூலுக்காய் தம் முழு ஒத்துழைப்பை நல்கிய
நலன்விரும்பிகள் சங்க அங்கத்தவர்களுக்கும்
மிகக் குறுகிய நாட்களில் சிறப்பாகவும்
அழகாகவும் வெளியிட உழைத்த
தமிழ்ப் பூங்கா அச்சக உரிமையாளர் திரு. க. சிவகுரு அவர்களுக்கும்
அங்கு கடமை புரியும் ஊழியர்கள் அனைவருக்கும்
எமது கல்லூரியின் சார்பில் உளங்கனிந்த நன்றியறிதலைத்
தெரிவித்துக் கொள்கிறோம்

இக் கைநூல் ஆண்டுதோறும் அறிவியல் தாகம்
தீர்க்கும் அறிவு மலராக வெளிவர
தொடர்ந்தும் தங்களின் ஒத்துழைப்பை
எதிர்பார்த்து நிற்கிறோம்.

**வாழ்க கல்லூரி! வளர்க அதன் பணி!! ஓங்குக அதன் புகழ்!!**

21-10 1992

**மலர் வெளியீட்டுக் குழு**

UNIVERSITY OF JAFFNA Library SRI LANKA
University of Jaffna 250323 Library
ARCHIVES
250323
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி

முதலாவது ஆண்டு நிறைவையொட்டி

இருள் அகற்றி ஒளி யேற்றி
பீடு நடைபோட வாழ்த்துகிறோம்.

# சுதர்ஸனம் விற்பனை நிலையம்

பிரதான வீதி, நெல்லியடி.

# ராஜா தொழிலகம்

"ஐடியல்"

துருபதராஜ் வீதி, நெல்லியடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று விழாக்காணும் எங்கள்

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி

" ஆல்போல் தழைத்து அறுகு போல்
வேரூன்றி இன்பக் கனிகள் பலஉதவி
பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரமாண்டுகள்
வாழ்கவென வாழ்த்துகிறோம். "

"செல்லமுத்தூஸ்"

புடவை மாளிகை

பிரதான வீதி, நெல்லியடி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org